உ

சிவமயம்

சுன்னாகம்

வரகவி முத்துக்குமாரகவிராயர்

வழித்தோன்றல்

ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவர் அவர்களின்

கனிஷ்ட புத்திரன்

திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

அவர்களின்

# நினைவு இதழ்

அக்ஷய வருடம் மாசி மாதம் 30ம் நாள்

சனிக்கிழமை

14 - 03 - 87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, B. A.

தோற்றம் 15 - 3 - 1900

மறைவு 14 - 2 - 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம்

# திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

அவர்களின்

# வாழ்க்கைச் சரித்திரக் குறிப்புகள்

பிறப்பு, இடம் : 15-03-1900 சுன்னாகம், யாழ்ப்பாணம்.

தகப்பன் : திரு. அ. குமாரசுவாமிப்புலவர்

தாய் ; சின்னாச்சி அம்மையார்

மரபு : திரு. வரகவி முத்துக்குமாரகவிராயர் மரபு

## கல்வி கற்ற பாடசாலைகள், கல்லூரிகள்

1905—1908 யா/அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, சுன்னாகம்.
தலைமை ஆசிரியர்: திரு. க. நன்னித்தம்பி

1909—1913 யா/மல்லாகம் ஆங்கில பாடசாலை
தலைமை ஆசிரியர்: திரு. வ. வியாகேசு,
திரு. வ. பொன்னுச்சாமி

1914—1916 யா/கந்தரோடை ஆங்கில வித்தியாசாலை
தலைமை ஆசிரியர்: திரு. இளையதம்பி, பீ. ஏ.;
சித்தி-ஈ. எஸ். எல். சி.

1917—1920 யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
அதிபர்: திரு. ரி. ஏச். குரேசெற், எம். ஏ.
சித்தி-கேம்பிரிச் உயர்தரப் பரீட்சை

1920—1922 யா/மத்திய கல்லூரி
அதிபர்: ஏச். புல்லோ, பீ. ஏ.; பீ. எஸ்சி.
சித்தி-இலண்டன் மற்றிக்குலேசன்
பாடங்கள்: ஆங்கிலம், தமிழ், கணிதம், பௌதிகம், இயந்திரவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1923—1926 யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
அதிபர்: நெவின்ஸ் செல்வத்துரை, பீ. ஏ.
இடைக்கலை வகுப்பிற் சிலகாலம்

சென்னை பச்சையப்பன் கல்லூரி
அதிபர்: திரு. M. இரத்தினசாமி, M. A.
இடைக்கலை வகுப்பு சித்தி, தமிழ், தற்காலச்சரிதம், பழையகாலச்சரிதம், சமஸ்கிருதம்.

1927—1929 திருச்சி அர்ச் சூசையப்பர் கல்லூரி
(St. Joseph's College)
அதிபர்: லீ S. J., (Leigh, S. J.)
பீ. ஏ. சித்தி
பாடங்கள்: ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம்.

## சமஸ்கிருதம் கற்பித்த ஆசிரியர்கள்

1. திரு. அ. குமாரசுவாமிப்புலவர் — சுன்னாகம்
2. திரு. வி. சிதம்பரசாஸ்திரி
அதிபர், சமஸ்கிருத பாடசாலை, சுன்னாகம்
3. திரு. வி. அனந்தாசாரியார்
பச்சையப்பன் கல்லூரி, சென்னை
4. திரு. வி. ஸ்ரீனிவாசாச்சாரியார்
அர்ச் சூசையப்பர் கல்லூரி, திருச்சி

## கற்பித்த இடங்கள்

1922—1923 பரமேஸ்வரக் கல்லூரி
1931—1932 தமிழ் விரிவுரையாளர்
லோயலாக் கல்லூரி, சென்னை;
1934 அதிபர், வைத்தீஸ்வரக் கல்லூரி

## சைவ வித்தியாவிருத்திச் சங்கப் பாடசாலைகளில் அதிபராக 25 வருடம் கடமையாற்றிய இடங்கள்

1934—1943 யா/செங்குந்தக் கல்லூரி
1944—1945, 1950—1951 யா/கட்டைவேலி ஞானசாரியக் கல்லூரி
1946—1950, 1956—1960 யா/அராலி இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1953—1955 யா/இடைக்காடு இந்துக் கல்லூரி
15-03-1960 இளைப்பாறியது

## பாடசாலை நிகழ்ச்சிகள்

8-4-1923

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு: நெ. செல்வத்துரை அவர்கள் கேள்விப்படி முன் ஆயத்தமின்றிச் சுயராச்சியம் என்னும் விடயத்தைப்பற்றி மாணவர் சங்கத்தில் பேசியது. சென்னைப் பச்சையப்பன் கல்லூரி இடைக்கலை வகுப்பில் விரிவுரையாளர் திரு. வேதரத்தினம் அவர்கள் விரும்பியவாறு முன் ஆயத்தமின்றித் தமிழ்க்கல்வி என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றியது.

30-1-1925

சென்னை செங்காங்கடை நாட்டுப் பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வண: ஸ்ருவாட் (Rev. Stewart) செய்த கிறிஸ்து மத பிரசாரத்தை மறுத்துப் பேசியது:

3-11-1925

பெசன்ற் அம்மையார், வண. அருண்டேல், கனம் ஸ்ரீநிவாச சாத்திரி என்போர் தலைமையில் நிகழ்ந்த சென்னை மாணவர் மாநாட்டிற்கு பச்சையப்பன் கல்லூரிப் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டு மகாநாட்டில் பங்குபற்றியது:

24-8-1926

அரசாங்க நியாயவாதி கோவை திரு: ரி: ஆர். சுந்தரம் பிள்ளை, பீ: ஏ. பி. எல்: அவர்கள் தலைமையில் கம்பன் என்னும் பொருள்பற்றிப் பச்சையப்பன் விடுதி மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றியது.

23-11-28

திருச்சி தமிழாராய்ச்சிக் கழகத்தின் சார்பில் திருச்சி அர்ச் சூசையப்பர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. சிவப்பிரகாசம்பிள்ளை தலைமையில் கம்பன் கவித்துவம் என்னும் பொருள்பற்றி பிஷப்கீபர் கல்லூரி மண்டபத்தில் சொற்பொழிவாற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருங்கிப் பழகிய பெரியோர்களும், நண்பர்களும்

திரு. V. மாசிலாமணிப்பிள்ளை, B. A. B. L, சென்னை;
(பதில் உயர் நீதிமன்ற நீதிபதி)

திரு. K. நமசிவாய முதலியார், சென்னை.
[பண்டிதர் மாகாணக் கல்லூரி)

திரு. மோ. கந்தசாமி முதலியார், B. A., M. R. A. L., சென்னை.
(தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி)
மகா மகோ உபாத்தியாயர்.

திரு. உ. வே. சாமிநாத ஐயர், சென்னை.
பண்டிதர், மாகாணக் கல்லூரி

திரு. சுவாமி வேதாசலம், சென்னை.

திரு. வண. பொப்பிலி, சென்னை.
மகா மகோ உபாத்தியாயா

திரு. கதிரேசன் செட்டியார், செட்டிநாடு.
மகா மகோ உபாத்தியாயர்

திரு. சேதுப்பிள்ளை, B. A., B. L., சென்னை.

திரு. மூ. வெங்கடசாமி நாட்டார், திருச்சி.

திரு. ம. க. வேற்பிள்ளை, சிதம்பரம்.
(தலைமை ஆசிரியர், நாவலர் பாடசாலை)

திரு. உமாமகேஸ்வரம்பிள்ளை, தஞ்சை.

## பொதுச் சேவைகள்

1. மயிலணிக் கந்தசுவாமி கோயில் தர்மபரிபாலகர்.
2. மயிலணி சைவவித்தியாசாலை முகாமையாளர்.
3. சைவ வித்தியாவிருத்திச் சங்க நிர்வாகசபை அங்கத்தவர் (*Hindu Board of Education*).
4. வடமாகாண தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் (15-9-45);
5. புகையிரத பிரயாணிகள் சங்க உபதலைவர் (1944).
6. ஏழாலை முருகமூர்த்தி கோயில் விசாரணைச் சபையில் ஆணையாளராகக் கடமையாற்றியது;

## குடும்பம்

| | | |
|---|---|---|
| தகப்பன் : | திரு. அ. குமாரசுவாமிப்புலவர் | 1854—1922 |
| தாயார் : | திருமதி ம. சின்னாச்சியம்மை | 1861—1906 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகோதரங்கள் :**

| | |
|---|---|
| திருமதி **விசாலாட்சி (சகோதரி)** | *1892—1923* |
| திரு. **அம்பலவாணபிள்ளை** | *1895—1975* |
| திரு. **முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை** | *1900—1987* |

**விவாகம் :** வழக்கறிஞர் **திரு. தி. குமாரசுவாமி,** J. P. **அவர்களின் சிரேஷ்ட புத்திரி கமலாம்பிகை அம்மையாரை** *4-12-1931* **ஆந் திகதி விவாகம் செய்தார்.**

**பிள்ளைகள் :**

*(i)* **மங்கையர்க்கரசி,** B. A.
அரசினர் ஆசிரியர் கல்லூரி, கோப்பாய்.
**விவாகம் :** திரு. க. **திருச்சிற்றம்பலம்,**
உதயன், சஞ்சீவி பிரசுராலயம்

*(ii)* **சிவசோதி**
ஆசிரியை, இராமநாதன் கல்லூரி.
**விவாகம் :** திரு. **வே. துரைசிங்கம்,**
வருமானவரி அதிகாரி
**பிள்ளை : வாகீசன்.**

*(iii)* **குமாரசுவாமி**
தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்
**விவாகம் :** இ. **பரமேஸ்வரி, கோப்பாய்.**
**பிள்ளைகள் : யமுனா, ஜானகி.**

*(iv)* **சந்திரசேகரன்**
நீதிமன்ற பிரதம இலிகிதர்
**விவாகம் :** ம. **இராஜேஸ்வரி,**
**முதலியாவளவு, உடுப்பிட்டி.**
**பிள்ளைகள் : குமரேசன், குமாரசூரியர்.**

## தலயாத்திரை

1. **தென்னிந்திய யாத்திரை (குடும்பத்தோடு)** — *1942, 1943*
2. **காசி யாத்திரை, இமயமலை யாத்திரை** — *1957*
3. **காசி யாத்திரை (குடும்பத்தோடு)** — *1966*
4. **தென்னிந்திய யாத்திரை** — *1971*
5. **கதிர்காமம்**
6. **திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முனேஸ்வரம், மண்டூர் கந்தசுவாமி கோவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்
## இயற்றிய நூல்கள்

### செய்யுள் நூல்கள்

1. மயிலணி அந்தாதி (1966)
2. மயிலணி முருகவேள் மும்மணிக்கோவை (1961)
3. காசியாற்றுப்படை (1962)
4. திருக்கேதீச்சர நான்மணிமாலை (1961)
5. கண்ணகி வெண்பா (1971)
6. சந்திரசேகரப் பிள்ளையார் இரட்டைமணி மாலை (1959)
7. கந்தையாப்பிள்ளை நினைவுப் பாமாலை (1958)

### வசன நூல்கள்

8. குமாரசுவாமிப் புலவர் வரலாறு (1970)
9. குமாரசுவாமிப் புலவர் நினைவுகள் (1967)
10. யாழ்பாணக் குடியேற்றம் (1984)
11. சிவசம்புப் புலவர் சரித்திரம் (1959)
12. மகாத்மா காந்தி (1948)
13. முருகா தத்துவம் (1942)

### ENGLISH

14. *Kumaraswamy Pulavar* (1972)

### தொகுப்பு நூல்கள்

15. தோத்திர மஞ்சரி (1933)
16. முருகன் திருப்புகழ் மாலை (1947)
17. ஆறுமுகநாவலர் கவித்திரட்டு (1972)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. முருகேச பண்டிதர் கவித்திரட்டு (1960)
19. கந்தையாப் பண்டிதர் கவித்திரட்டு (1954)
20. முத்துக்குமார கவிராயர் கவித்திரட்டு (1959)
21. சி. வை. தமோதரம் பிள்ளை கவித்திரட்டு (1974)
22. மரணத்தை வருவிக்கும் முப்பொருள்கள் (1979)
23. குமாரசுவமிப்புலவர் பெற்ற கடிதங்கள் (1984)
24. அம்பலவாணபிள்ளை பாமாலை (1980)

## பதிப்பு நூல்கள்

25. தமிழ்ப் புலவர் சரித்திரம் (1954)
26. மாவைப் பதிகம் (1950)
28. ஐயனார் ஊஞ்சல் (1954)
29. ஞானக் கும்மி, யேசுமத பரிகாரம் (1931)
29. கண்ணகி கதை (1900)

## இனி வெளிவரும் நூல்கள்

1. வேதபுராண சாஸ்திர ஆகம ஆராச்சி
2. நூறாண்டு வாழ்வதெப்படி ?
3. சுன்னைப் புலவர்கள்
4. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை கவிதைகள்
5. ஜவகர்லால் நேரு [(இரண்டாம் பகுதி)
6. விநோபா

## பதிப்பு நூல்கள்

7. குமாரசுவாமிப்புலவர் கவிதைகள்
8. குமாரசுவாமிப்புலவர் கட்டுரைகள்
9. இலக்கியச் சொல்லகராதி
10. கல்வளையந்தாதியுரை
11. ஏரெழுபது பொழிப்புரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையவர்களும் நானும்

பண்டிதர் கா. நமசிவாயம்
சைவப்புலவர்-சுன்னாகம்

'நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்,
கண்ணுடையர் என்பவர் கற்றோர்முகத் திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்;'

சுன்னாகம் மயிலணி புலவரகத்தில் தீர்காயுஸ் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்த உயர்திரு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் கற்றுவல்ல புலவர்களுடன் அருங்கலை விநோதராகச் சல்லாபஞ் செய்வதில் பலகாலும் இன்புற்றவர். தென் தமிழ் நாட்டில் டாக்டர் உ. வே. சாமிநாதஐயர், திரு. சுவாமி வேதாசலம் என்போருடன் கவிபாடி சொற்சுவை, பொருட்சுவைகளை ரசனை செய்தவர் யாழ்ப்பாணத்தில் இவர் காலத்தில் வாழ்ந்த அத்தனை புலவர் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து பரிசில்களும் வழங்கினார்.

உத்தியோக ஓய்வு பெற்றபின் செய்யுள் நூல்கள் யாத்தவில் ஈடுபட்டார். சந்திரசேகரப் பிள்ளையார் இரட்டை மணிமாலை, மயிலணி அந்தாதி முதலிய தோத்திர நூல்கள், இலக்கிய நூல்கள் என்பனவாக நாற்பதிற்கு மேலும் பிரபந்தங்கள் இயற்றியதை வியந்து பாராட்டாமல் அறிஞர்கள் இருப்பாரோ!

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்;

இப்பெருமையுடைய தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், இன்தமிழ், இந்தமிழ், அருந்தமிழ், நற்றமிழ், மெய்த்தமிழ், தெய்வத்தமிழ், கன்னித்தமிழ், திருத்தமிழ் எனப் பலவாக விளக்கமுறும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தத் தமிழ்ப் பாக்களைச் சுருதி லயம் இசையப்பாடி எனக்கும் பன்முறை சொன்னதுடன் என்னையும் பாடச் செய்தவர். நுண்பொருள் உள்ளுறைப் பொருள் கூறுவார் தமக்கே சிறப்பாகச் சமயக் கருத்தும் உடையவர்: "செம்மையுள் நிற்பீராகிற் சிவகதி சேரலாமே" என்ற அரும் பொருள் தரும் சைவசமய சன்மார்க்க நெறி கொலையும் புலையுந் தவிர்ந்தது; சூதும் வாதும் அற்றது. அறியாமையும் வஞ்சகமுந் தவிர வழி வகுப்பது. இச் சமயத்துக்கு ஏனைச் சமயங்கள் ஒப்பாகா.

தந்தையார் செய்து பதித்த அத்தனை நூல்களையும் தாமும் புதிய பதிப்புக்களாக எழுதி வெளியிட்டார்; இவ்வெளியீடுகளை எழுதுவதிலும் புறூப் பார்ப்பதிலும் பங்கு பெற்றுள்ளேன்; முருகவேள் மும்மணிக்கோவை, மயிலணி அந்தாதி அரங்கேற்றிய தருணம் பெரியோர் சபையில் இன்னிசை ஒலிக்கப் பாடினேன்: எனது குரலோசை பாடல்களின் மெய்ப்பொருள்கள் தெளிவாக எவர்க்கும் புலப்படுத்தும் என்றுரைத்து என்னை உபசரித்தும் பாராட்டியும் போற்றியவர்.

நூல் வெளியீடு செய்தற்கு எவரது பொருளுதவியும் இவர் எண்ணியதுமில்லை; பெற்றதுமில்லை. புத்தக அச்சுக்கூலி கடதாசிச் செலவில் பாதிதான் விலை குறித்திருக்கிறார். இலவசமாகக் கொடுத்தால் நூலின் மதிப்பை அறியாதார் இகழாமை கருதியே விலை குறித்துள்ளார் என்பதை அறிதல் உத்தமம். ஐம்பதினாயிரம் ரூபாவுக்கதிகமாக வெளியீட்டுச் செலவு உண்டு. விற்றுவரவு மிகமிக அற்பம். தமிழ் மாணக்கர்களும், செந்தமிழ்ப் பிரியர்களும் நயந்து சுவைப்பதும் மேன்மேலும் படிக்க வேண்டும் என்பதும் இவர்களுடைய பெரு நோக்கம்: இவருடைய நோக்கத்தை அறிந்து பேணுதல் தமிழ் மக்கள் கடமையாகும்.

சுன்னுகம் புலவர்கள் அதிகரித்தது. வரத பண்டிதர், முத்துக்குமாரகவிராசர், முருகேச பண்டிதர், நாகநாத பண்டிதர், மாணிக்கத் தியாகராச பண்டிதர், குமாரசுவாமிப்புலவர், அம்பலவாணபிள்ளை, முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை இன்னும் தமிழ்ப் பாவலர் பல்லோர் உளர். இனி எதிர்காலத்தும் புலவர்கள் தோன்றுக. யாமும் வேண்டுதல் புரிவோமாக.

ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ் உலகத்தை அளந்த மேன்மையும் தெய்வத் தன்மையும் உடையதாவது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் இன்னதன்மை உடையது என்று நிச்சயித்த அளவு படுத்திய உலகத்தின் உண்மைத் தத்துவத்தை என்க. இக் கருத்தையே கம்பரும் நீண்ட தமிழாலுலகை நேமியினளந் தான் என்று கூறினர். புலன்பொறிகள், பூதங்கள், அகக்கரு விகள் புருடன் (ஆன்மா) என்ற இருபத்தைந்தும் அல்லது உல கம் வேருக இல்லை. இவைகளை அறிந்தான் உலகம் தெரிந் தோன் ஆவன். இத் தத்துவஞானி எவரையும் ஏமாற்ற மாட் டான் தானும் ஏமாருன். தமிழறிஞர் உண்மை இது. தமிழைப் போற்றிப் படித்தால் இம்மை, மறுமை அம்மையினும் தருமம் பொருள் இன்பங்களை எய்துவர்.

---

## கவிவாணர்

பண்டிதர் மு. கந்தையா — ஏழாலை

முத்துக் குமார சுவாமிப் பெரியோய் நின் மூதறிவும்
மெத்தும் பலகலை யார்வமும் மீதூர் தமிழ்ப்புலமைப்
பித்தும் பிதற்றுகின் முன்னோர் மரபுக் கவிதைரசம்
தித்தித் தினித்தசெந் நாவுமெந் நாளுமெஞ் சிந்தையவே;

முத்துக் குமார கவிராச சேகரன் மெய்ம் மரபில்
தத்திக் கிளருந் தமிழ்ப் புலமைக் கிங்கொர் தாரகமாம்
முத்துக் குமார சுவாமியு மாண்டன னேனதுதான்
எத்திக் கினிவினி யேவர்தம் பாற்சென்றி னையல்வதுவே;

அன்பர்மெய் நண்பன் அறிதர்க்குப் பேராசான்
இன்பத் தமிழுக் கியல்தாதா — நன்சுன்னை
வேளாளன் முத்துக் குமரன் பிரிந்துயர்
தாழா தெஞ் ஞான்றுந் தமிழ்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாவுக்கு ஆற்றுது மொழிந்தவை

"கோவை வாணன்"

பூவரசு பாடியநம் புலவருக்கோர் வாரிசெனப்
பாவரசர் போற்றும் பதமெல்லாம் பாங்குசெய
நாவரசர் தாம்நாடி நன்றே "புலவரகம்"
ஓவாதே வந்தனையும் ஆக்கப்பா டென்னேயோ;

நல்லவரை நன்கறிந்தால் எல்லவரும் ஏற்றுவக்கும்
சொல்லடுக்கால் வல்லாய் வந்திடுவாய் எங்குழுவில்
பொல்லாப்பு ஒன்றுமிலாப் புண்ணிய நின் பாலாம்
எல்லாமே என்றிட்ட வாயானே போதியோ?

நன்றிநவில் வானத் பண்பாளற்கு என்றேநான்
இன்று வீசு காற்றினிலும் ஏழ்மடங்கு வீச்சாக
துன்றி வருவேனென்று நானடைந்து வருகையிலே
அன்று வாளில் அன்பிலான் குண்டொன்று அங்காத்ததே.

என்னுள்ளத் தென்றுமுள பொன்முடங்கல் தன்னை
உனைநாடி விட்டுள்ளேன் தொட்டதனை பாராய்
இன்னவகை என்றுனக்கு எல்லாமே பேசும்
சொன்ன சொல்லுத் தப்பாது தோன்று வென்யானுங்கே;

பூவாத தீம்பலவும் புன்சிரிப்புச் சானகியும்
நாவாலே வாகீசும் நன்களைப்ப — ஓவாதே
மூடாத வாயிலண்டை ஐயா நாம் அன்பாகக்
கூடாதே கூட்டுவதெப் போது?

புலவரகத் தேநீ விடுத்துள்ள எச்சமெலாம்
இலகுபத மாக எமக்கு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " பரமனடி சேர்ந்திட்டான் பாவலன் "

சி. சபாநாதன் — வட்டுக்கோட்டை

நீர்வளஞ் சூழ் யாழ் நகரில்
நித்திலங் கொளிக்கும் சுன்னுகத்தில்
கூர்மதி நுட்ப புலவர் வழியில்
முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை தோன்றி
சீர்கள் பல பெற்றுயர்ந்து
சிறப்புறு பணிகள் பல செய்து
பார் போற்ற பண்புடன் வாழ்ந்து
பரமனடி சேர்ந்திட்டான் பாவலன்.

செந் தமிழில் லக்கணம் ஆங்கிலம்
சீருறக் கற்று யர்ந்து
சிந்தை நிறை வுற்றுயர்ந்திட
சிவப்பணிகள் பல செய்து
கந்தன் கோயில் கருங்கற் பணிகள்
கனிவுடன் ஆற்றி
முந்தை வினைப் பயன் முற்றுற
முருகன் கழலடி சேர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயில் அகவல்

அ. வி. மயில்வாகனம் — கோப்பாய்

## தேற்றம்

பிறவியிற் பாரதி பரிச்சய . குடும்பம்
பரம்பரைப் புலமை பழுதிலாப் பீடம்
இவர் தற்குரியை நீயெனத் தேர்ந்தே
தோன்றிய சூழல் மேலும் துலங்க
நல்லோன் நறியோன் கல்விக் காசான்
அளவில் ஆற்றலில் பழகலில் பண்பில்
மாண்பில் மனுக்குல மதிப்பில் எல்லாம்
நினக்கு நேர் நீயே எனக் கூறும்
ஆதலின்,
ஆயிரத் தொடைடம் பானைந்தும் பிறையும்
கண்டனை என்றலிற் கறையுண் டென்பேன்
அப்பிறை தானே நின்னைத் தேடி
அத்துணை முறையும் கண்டு கண்டு
களித்திட்ட தென்பே னியானே
அதனால்
சந் ததம் காண இந்த இப்பிறவியை
முந்தவே முடித்து சொந்தமாய் ஒடுக்கி
சுந்தரம் பாதம் சுகித்திடக் கூட்டிற்றே:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நன்றி

திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையவர்களுக்கு உற்ற நேரத்தில் உதவிய வைத்திய கலாநிதிகள், ஈமக் கிரியைகளில் கலந்து அநுதாபம் தெரிவித்த உற்றார், நண்பர்கள், அநுதாபச் செய்திகள் அனுப்பிய பெரியோர்கள், இரங்கலுரை நிகழ்த்திய அன்பர்கள், மலர்மாலைகள் மலர்வளையங்கள் சாத்தி இறுதி அஞ்சலி செலுத்திய நண்பர்கள் எல்லோருக்கும், அநுதாபச் செய்தி அனுப்பிய கல்லூரிகள், சமய சமூக ஸ்தாபனங்கள், பத்திரிகைள் என்பவற்றுக்கும் எமது நன்றி.

புலவரகம்
மயிலணி
சுன்னுகம்

மக்கள், மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகன் அச்சகம்,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org